Edit with WPS Office

## II B.A. HISTORY( NME)

## III – SEMESTER

### HISTORY OF FREEDOM MOVEMENT IN INDIA FROM 1885 TO 1974 C.E (18K3HELO1)



## UNIT: I - தேசியவாதம்

- **தேசியவாதம்** என்பது நாட்டினம் ஒன்றின் மீது அக்கறை கொண்ட ஒரு கருத்தியல், உணர்வு, ஒரு பண்பாட்டு வடிவம் அல்லது சமூக இயக் கம் ஆகும். நாட்டினங்கள் என்பதன் வரலாற்று மூலம் குறித்துக் குறிப் பிடத் தக்க கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், ஒரு கருத்தி யல், ஒரு சமூக இயக்கம் என்ற வகையிலாவது, தேசியவா தம் என் பது ஐரோப்பாவில் உருவான ஒரு அண்மைக் காலத் தோற்றப் பாடு என் பதைப் பல அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

- இது எப்போது எங்கே தோன்றியது என்பதைத் துல்லியமாகச் சொல்ல முடியாவிட்டாலும், 18 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் தோன்றிய மக்கள் இறைமைக்கான போராட்டங்கள் போன்றவற்றோடு இது நெருங்கிய தொடர்பு கொண்டது. அப்போதிருந்து, உலக வரலாற் றில் தேசியவாதம், குறிப்பிடத்தக்க அரசியல், சமூக சக்தியாக இருந்து வந்தது. முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் உருவானதற்காக முக் கிய காரணமாகவும் இது தொழிற்பட்டதைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.


- ஒரு கருத்தியல் என்ற வகையில், தேசியவாதம், மக்கள் இறைமைக் கொள் கையின்படி மக்கள் என்பது நாட்டினம் (nation) என்று கொள்கிறது. அத்துடன், இதன் விளைவாக நாட்டினத் தன்னாட்சி உரிமைக் கொள்கையின் அடிப்ப டையில் நிறுவப்பட்ட நாட்டின அரசுகளே ஏற்றுக்கொள்ளத் தக்கவை என் கிறது தேசியவாதம். பல நாடுகள் பல இனங்களைக் கொண்டிருக் கின்றன அல்லது

Edit with WPS Office

நாட்டினத் தகுதி கோரும் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்க ளைக் கொண்டவையாக இருக்கின்றன. இதனால், தேசியவாதம் பெரும்பாலும் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதுடன், பேரரசுவாத ஆக்கிரமிப்பு, நாட்டின் விடுதலை ஆகிய சூழல்களில் போர்கள், பிரிவினை, இனப்படுகொலை போன்றவற்றோடு தொடர்புடையதாக உள்ளது.

- தேசியவாதமானது தேசத்திற்கான பக்தி என்பதாகும். இது மக்கள் ஒன்றாக இணைக்கும் ஒரு உணர்வு ஆகும். தேசிய சின்னங்கள், தேசிய கொடிகள், தேசிய கீதங்கள், தேசிய மொழிகள், தேசிய தொன்மங்கள் மற்றும் தேசிய அடையாளத்தின் பிற சின்னங்கள் ஆகியவை தேசியவாதத்தில் மிக முக்கியமானவை. தேசியவாதம் என்பது ஒரு குறிப்பிட்ட நாடுகளின் நலன்களை மேம்படுத்துவதன் மூலம், குறிப்பாக சுய-ஆட்சி, அல்லது முழு இறையாண்மையை பெற்றுக்கொள்வதன் நோக்கம் கொண்ட குழுவினரின் தாய்நாட்டின் மீதுள்ள அரசியல், சமூக மற்றும் பொருளாதார அமைப்பு களின் ஒரு எல்லையாகும். தேசியவாதம் என்பது கலாச்சாரம், மொழி, இனம், மதம், அரசியல் இலக்குகள் அல்லது ஒரு பொதுவான மூதாதையர் உள்ள நம்பிக்கை போன்ற பகிரப்பட்ட குணாதிசயங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய அடையாளத்தை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் நோக்குநிலை ஆகும்.

## இந்திய தேசிய காங்கிரஸ்




- 1885 ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தொடக்க காலத்தில் இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவில்லை. அப்போது இதன் குறிக்கோள் கல்வி கற்ற இந்தியர்களுக்கு அரசில் பெரும்

Edit with WPS Office

பங்கு வாங்கி தருவது தான். உமேஷ் சந்திர பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, ஆலன் ஆக்டவியன் ஹியூம், சுரேந்திரநாத் பானர்ஜி மற் றும் வில்லியம் வெட்டர்பர்ன் ஆகியோரால் தொடங்கப்பட்ட **இந்திய தேசிய காங்கிரஸ்** கட் சியின் முதல் தலைவராக, பம்பாயில் 1885 டிசம்பரில் நடந்த கூட்டத் தில் உமேஷ் சந்திரபானர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் 72 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். முதல் கூட்டம் புனேயில் நடப்பதாக இருந் தது, ஆனால் பிளேக் என்னும் கொள்ளை நோய் புனேயில் இருந்ததால் அக் கூட் டம் பம்பாய்க்கு மாற்றப்பட்டது.

- இதன் இரண்டாம் கூட்டம் 1886 டிசம்பர் 27 ல் நடைபெற்றது. இதில் 436 பேர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டின் தலைவராக தாதாபாய் நௌரோஜி அறிவிக்கப்பட்டார். இவரின் முயற்சியால் "Indian National Congress" என்று பெயர் மாற்றப்பட்டது. முன்றாவது மாநாடு சென்னையில் 1887 டிசம்பர் 27 ல் நடைபெற்றது.
- பிரித்தானிய அரசின் எதிர்ப்பு காரணமாக காங்கிரஸின் கொள்கை மாற்றம் கண்டது, இக்கட்சி விடுதலைப்போரில் தீவிரம் காட்ட தொடங்கியது. 1907ல் காங்கிரஸில் தீவிரபோக்குடையோர், மிதபோக்குள்ளோர் என 2 குழுக்கள் உருவாகின. தீவிரபோக்குடையோர் பால கங்காதர திலகர் தலைமையிலும், மிதபோக்குடையோர் கோபால கிருஷ்ண கோகலே தலைமையிலும் இயங் கினர். பாலகங்காதர திலகரின் செல்வாக்கால் காங்கிரஸ் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த பெரும் இயக்கமாக உருவாகியது, இலட்சக்கணக் கான மக்களை ஆங்கிலேயருக்கு எதிராக திரட்டியது.
- இந்திய விடுதலைப்போரில் முதன்மையான இடம்பிடித்த பால கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபத்ராய், பிபின் சந்திர பால், முகமது அலி ஜின்னா, தாதாபாய் நௌரோஜி, வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்களை காங்கிரஸ் கட்சி உருவாக்கியது.

### சூரத் பிளவு

- **சூரத் பிளவு** என்பது 1907 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசு கட்சியில் நடைபெற்ற பிளவினைக் குறிக்கிறது. 1885 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட காங்கிரசு துவக்கத்தில் பிரித்தானிய இந்தியாவில் இந்தியர்களின் உரிமைக் காக பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் மனுக்கொடுத்தல், கோரிக்கை வைத் தல் போன்ற மிதவாத செயல்களில் ஈடுபட்டு வந்தது. ஆனால் காலப்போக் கில் தேசியவாத உணர்ச்சிகள் மிகுந்ததால் குடியேற் றவாத அரசுக்கு எதி ரான போராட்டங்கள் தீவிரமடைந்தன.
- 1906 ஆம் ஆண்டு நடந்த வங்காளப் பிரிவினையை எதிர்க்க காங்கிரசு சுதேசி இயக்கத்தைத் தொடங்கியது. மேலும் காலனிய அரசுக்கு வங்காளத்தில் எவ் வித ஒத்துழைப்பும் தரக்கூடாது என்று 1906 ஆண்டு கல்கத்தா மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. காங்கிரசின் தீவிர தேசியவாத உறுப்பினர்கள் சுதேசி இயக்கத்தையும், ஒத்துழையாமையையும் நாடு முழுவதும் விரிவு படுத்த வேண்டும் என எண்ணினர். ஆனால் மிதவாதிகள் அதனை விரும்ப வில் லை; அந்நியப் பொருட்களை மட்டும் புறக்கணித்தால் போதுமானது, நேர டியாகக் காலனிய அரசுடன் மோத வேண்டாம் என கருதினர். இந்த கருத் து வேறுபாடு 1907 ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் வெளிப்படையாக வெடித்தது. கோபால கிருஷ்ண கோகலே , தாதாபாய் நௌரோஜி, ஃபிரோஸ்ஷா மேத்தா ஆகியோர் தலைமையிலான மிதவாதி கள் பிரிவு இம்மோதலில் வெற்றி பெற்றது. பால கங்காதரதிலகர் தலை மையிலான தீவிரவாதிகள் கட்சியினை விட்டு வெளியேறினர்.
- இப்பிளவினால் இரு பிரிவினரும் பலவீனமடைந்தனர். திலகரின் சுதேசி இயக்கம் வலுவிழந்து காலனிய அரசால் ஒடுக்கப்பட்டுவிட்டது. அரசுடன்

Edit with WPS Office

இணக்கமாக செயல்பட்டதால் இளைய தலைமுறை காங்கிரசு தொண்டர் களின் நம்பிக்கையையும் ஆதரவையும் மிதவாதிகள் இழந்து விட்டனர். இரு பிரிவினருக்கிடையேயான மோதலில் மிதவாதிகளின் நிலையை பலப்படுத்த, பிரித்தானிய அரசு அவர்களுக்காக சில சலுகைகளை அளித்தது - இந்திய அரசுச் சட்டம், 1909 இயற்றி அவர்களது சில கோரிக்கைகளை நிறைவேற்றியது. மேலும் 1911 இல் வங்காளப் பிரிவினையை இரத்து செய்து மீண்டும் அம்மாநிலத்தை ஒன்றிணைத்தது. இப்பிளவின் பின்ன டைவிலிருந்து மீள காங்கிரசுக்கு பல ஆண்டுகள் பிடித்தது. விடுதலைப் போராட்டத்தில் காங்கிரசு விட்டுச் சென்ற வெற்றிடத்தை பல புரட்சி இயக்கங்கள் ஆக்கிரமிக்க முயன்றன. 1916 இல் அன்னி பெசண்ட் டின் ஹோம் ரூல் இயக்கம் தொடங்கப்படும் வரை காங்கிரசால் எந்த பெரிய போராட்டத்தையும் நடத்த முடியவில்லை.

## கோபால கிருஷ்ண கோகலே




- இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுள் மறக்கமுடியாத தலைவர் கோபால கிருஷ்ண கோகலே. சமூக சீர்திருத்தவாதி. இந்திய தேசிய காங்கிரஸ்சின் மூத்த தலைவர் மற்றும் இந்திய சேவகர்கள் அமைப்பை உருவாக்கியவர். 1866 ஆம் ஆண்டு மே 9 அன்று மஹாராஷ்டிராவின் இரத்தினகிரியில் பிறந்தார். இவர் தந்தை கிருஷ்ணா ராவ் கோகலே , தாய் வலுபாய். கோகலேவின் குடும்பம் ஏழ்மையில் இருந்தபோதிலும் , கோகலேவுக்கு ஆங்கில கல்வி பயின்றார். இதன் மூலம் ஆங்கிலேய அரசில் ஒரு சிறு அதிகாரியாக வேலை கிடைக்கும் என்று அவர் குடும்பம் நம்பியது. பள்ளிப்படிப்பை ராஜாராம் உயர்நிலை பள்ளியில் முடித்தார். பின்பு பம்பாய்க்கு குடிபெயர்ந்து மேற் படிப்பை தொடர்ந்தார். பல்கலைக்கழக கல்வியைப் பெறும் முதல் தலைமுறை இந்தியர்களில் ஒருவராக இருந்த கோகலே 1884 ஆம் ஆண்டில் எல்பின்ஸ்டோன் கல்லூரியில் தன் பட்டப்படிப்பை முடித்தார். அதன் பிறகு பூனாவிற்கு சென்று பள்ளி ஆசிரியராக பணிபுரிந்தார். ஃபேர்குசான் கல்லூரியில் பேராசிரியராக சேர்ந்த அவர், பின்பு கல்லூரியின் முதல்வராகவும் 1902 வரை பணியாற்றினார். பூனாவில் தான் தன்னுடைய குருவான மகாதேவ் கோவிந்த் ரணடே என்ற அறிஞரை சந்தித்தார். அவருடைய பூனா சரவஜனிக் சபாவின் செயலராக பொறுப்பு வகித்தார். அவருடைய வழிகாட்டுதலில் தான் இந்திய சேவகர்கள் அமைப்பு உருவானது. சமூக குற்றங்களையும் ,

Edit with WPS Office


அநீதிகளையும் பயமின்றி எதிர்த்து கேட்ட இந்தியர்களை தயார்படுத்துவதே இவ்வமைப்பின் நோக்கமாகும். நாட்டுக்காக உழைப்பதையே இவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

- 1880 ஆம் ஆண்டு சாவித்ரிபாய் என்பரை திருமணம் செய்துகொண்டார். ஆனால் அவர் ஏழு ஆண்டுகளில் பிறவி நோய் காரணமாக இறந்து விடவே 1887 ஆண்டு மறுமணம் செய்து கொண்டார். இரண்டாம் திருமணம் மூலம் அவருக்கு காஷிபாய் , கோதுபாய் என்று இரண்டு மகள்கள் பிறந்தனர். கோகலேவின் குருவான ரணடேவின் வழிகாட் டுதலின் பெயரில் தான் அவர் இந்திய தேசிய காங்கரசில் 1889 ஆண்டு உறுப்பினரானார். துணை செயலாராக பணியாற்றியவர், பின்பு 1905 ஆண்டு தலைமை பதவிக்கு வந்தார். விடுதலை, மக்களாட்சி மற்றும் பாராளுமன்ற முறைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை புரிந் துகொண்டார். இந்திய தேசிய அமைப்பின் ஆரம்பக்கட்டத் தலை வராக இருந்தபோதிலும், கோகலே சுதந்திரத்தைப் பற்றி முதன்மையா கக் கவலைப்படவில்லை ஆனால் சமூக மறுமலர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தார்; அத்தகைய மறுமலர்ச்சிகள் ஏற்கனவே இருக்கும் ஆங்கிலேய அரசு நிறுவனங்களுக்குள்ளேயே பணி செய்வதன் மூலம் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று அவர் நம்பினார், இந்த நிலை திலகர் போன்ற அதி தீவிர தேசியவாதிக ளிடத்தில் பகைமையை ஏற்படுத்தியது. இத்தகைய எதிர்ப்புகளால் தைரியமிழக்காமல், தன்னு டைய மறுமலர்ச்சி குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வ தற்கு கோகலே தன்னுடைய அரசியல் வாழ்க்கை முழுவதும் ஆங்கிலேயர் களுடன் நேரடியாக பணி செய்தார்.
- மகாத்மா காந்தி வளர்ச்சிபெற்று வந்த ஆண்டுகளில் கோகலே அவ ருக்கு அறிவுரை யாளராக இருந்து வந்தார். 1912 ஆம் ஆண்டில் காந் தியின் அழைப்பின் பேரில் கோகலே தென் ஆப்பிரிக்காவுக்கு சென்றார். ஒரு இளம் பாரிஸ்டராக காந்தி, தம்முடைய தென் ஆப்பிரிக்க பேரர சுக்கு எதிரான போராட்டங்களிலிருந்து திரும்பி கோகலேவிடமிருந்து தனிப்பட்ட முறையில் அறிவுரைகளைப் பெற்றார். இதில் இந்தியா பற்றிய அறிவாற்ற லும் புரிதலும் மற்றும் சாதாரண இந்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் உள்ள டங்கியது. 1920 ஆம் ஆண்டுக் குள் காந்தி இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவராக உருவானார். தன்னுடைய சுயசரிதையில் காந்தி, கோகலேவை தன்னுடைய அறி வுரையாளர் மற்றும் வழிகாட்டி எனக் குறிப்பிடுகிறார். காந்தியும் கூட கோகலேவை ஒரு போற்றத்தக்க தலைவர் மற்றும் தேர்ந்த அரசியல் வாதியாக ஏற்றுக்கொண்டு, அவரை 'படிகம் போன்று சுத்தமானவர், ஆட்டுக்குட்டி போன்று மென்மையானவர், சிங்கம் போல் வீரமுடைய வர், தவறுக்கு பெருந்தன்மை கொண்டவர் மேலும் அரசியல் அரங்கில் ஒரு சரியான மனிதர்' என்று விவரித்துள்ளார்.
- கோகலேவிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தபோதிலும், அரசியல் மாற்றங்களைப் பெறுவதற்கான ஒரு வழியாக மேற்கத்திய நிறு வனங்களில் கோகலே வைத்திருக்கும் நம்பிக்கையை காந்தி நிராகரித் தார், அதன் விளைவாக அவர் கோகலேவின் இந்திய சேவகர்கள் அமைப்பில் உறுப்பினராகச் சேர விரும்பவில்லை.
- கோகலேஇன்ஸ்டிடியூட் ஆஃப் பாலிடிக்ஸ் அண்ட் எகனாமிக்ஸ் என்ற பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மஹாராஷ்டிராவின் பூனேவிலுள்ள டெக்கன் ஜிம்கானா பகுதியில் இருக்கும் பிஎம்சிசி சாலையில் அமைந்திருக்கிறது. இந்த நிறு வனம் திரு. ஆர்.ஆர். காலே அவர்களால் இந்திய சேவகர்கள் அமைப்புக்கு வழங் கப்பட்ட நிலையான

Edit with WPS Office

நிதியிலிருந்து உருவாக்கப்பட்டது. இந்திய சேவகர்கள் அமைப்பினர் தான் இந்த நிறுவனத்தின் அறங்காவலர்கள் ஆவார்கள். அதிக பொறுப்புக்களும் , பயணங்களும் கோகலேவின் உடல் நலத்தை பெரிதும் பாதித்தது. நீரிழிவு மற்றும் ஆஸ்த்துமாவால் உடல் நலம் குன்றி 1915 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் நாள் கோகலே தம்முடைய நாற்பத்து ஒன்பதாவது வயதில் இயற்கை எய்தினார்.

**பாலகங்காதர திலகர்: 23.7.1856 ரத்தினகிரி, மகாராஷ்டிரம்**

- 

  “சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவோர் அடிக்கடி கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர். அவர்களுக்காக வாதாடி, அவர்களைக் காப் பாற்ற வேண்டும். அதையே என் நாடு என்னிடம் எதிர்பார்க்கிறது. அதற்காகவே நான் சட்டம் படிக்க விரும்புகிறேன்” என்றார் பாலகங் காதர திலகர்.

- பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்று, சமஸ்கிருதத்தி லும், கணிதத்திலும் சிறந்து விளங்கினார். சட்டம் படிக்க சட்டக் கல்லூரிக்கு விண் ணப்பித்தபோது, அந்தக் கல்லூரி முதல்வர் 'கணிதம் படித்தால், நல்ல எதிர்காலம் உனக்கு அமையும்' என்றார். அதை மறுத்த திலகர், 'தேசப்பற்று மிகுந்த வழக்கறிஞர்களை என் நாடு எதிர்பார்க்கிறது. எனவே, நான் சட்டம் படிக்க விரும்புகிறேன்' எனக் கூறினார். சட்டம் படித்து, தியாகிகளுக்காக வாதாடி, அவர்களைச் சிறையிலிருந்து மீட்ட பெருமை திலகருக்கு உண்டு.

- மக்களுக்குச் சுதந்திர வேட்கையை ஏற்படுத்த, நண்பர்களுடன் இணைந்து , 1881ல் மராட்டி மொழியில் 'கேசரி', ஆங்கிலத்தில் 'மராட்டா' ஆகிய பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தினார். ஆங்கில அடக்குமுறை , சுரண்டல் ஆகியவற்றை கேசரி பத்திரிகை வெளியிட்டது. பத்திரி கையின் அபார விற்பனை, ஆங்கிலேயருக்கு அதிர்ச்சியையும், அச்சத் தையும் அளித்தது. ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துகளை வெளியிட் டதால், 4 மாத சிறைத் தண்டனை பெற்றார். அதுதான், அவரின் முதல் சிறை அனுபவம்.

- 'நாட்டின் குடிமக்கள் அனைவரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடு பட்டால்தான், சுதந்திரம் விரைவில் கிடைக்கும்' என்றார். 1907ல், நாக் பூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், மிதவாதிகள், தீவிரவாதிகள் என, அக்கட்சி இரு பிரிவுகளாகப் பிரிந்தது. திலகரின் தலைமையில் அவருடைய ஆதரவாளர்கள், அந்நிய ஆட்சியை எதிர்த்து தீவிரமாகச் செயல்பட்டனர். இதனால் மீண்டும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

- வங்கப் பிரிவினை எதிர்ப்பு, சுதேசிப் பொருட்களுக்கு ஆதரவு, அந்நியப்

Edit with WPS Office

பொருட்கள் எரிப்பு என, பல போராட்டங்கள் இவர் தலைமையில் நடந்தன. 'திலக் மகராஜ்', 'லோகமான்ய' என்று மக்களால் போற்றப் பட் aடார். 'சுதந்திரம் எனது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவேன்' என்று இறுதி மூச்சுவரை முழங்கினார், இந்திய தேசிய இயக்கத்தின் தந்தை திலகர்.

## வங்காளப் பிரிவினை

- **வங்காளப் பிரிவினை** அல்லது **வங்கப் பிரிவினை** (*Partition of Bengal*) அல்லது **வங்கபங்கம்** என்பது 1905ல் பிரித்தானிய இந்தியாவின் வங் காள மாகாணத்தை இரண்டாக பிரிக்க எடுக்கப்பட்ட முடிவு இந்திய தேசியவாதிகளின் எதிர்ப்பாலும், இந்துக்களின் வற்புறுத்தலாலும் 1911ல் மீண்டும் வங்காளம் ஒன்றாக இணைக்கப்பட்டது. 1947ல் இந்தியப் பிரி வினையின் போது மத அடிப்படையில் மீண்டும் இரண்டாகப் பிரிக் கப்பட்டது.

- வங்காளம் பிரித்தானிய இந்தியாவின் மிகப் பெரிய மாகாணங்களில் ஒன்று. 1905, 1,89,000 சதுர மைல்கள் பரப்பளவையும் 8 கோடி மக்கள் தொகையினையும் கொண்டிருந்தது. அளவிலும் மக்கள் தொகையிலும் பெரிதாக உள்ள மாகாணத்தை நிருவகிப்பது கடினமாக உள்ளதென்று கூறி காலனிய ஆட்சியாளர்கள் அதனை இரண்டாகப் பிரிக்க முடிவு செய்தனர். இப்பிரிவினையோடு சேர்த்து அசாம் மத்திய மாகாணங்களின் பகுதிகள் சிலவற்றை புதிய மாகாணங்களோடு இணைக்கவும் முடிவு செய்தனர். கிழக்கு வங்காளத்தின் முசுலிம்களும் மேற்கு வங்கத்தில் இந்துக்களும் பெரும்பான்மையாக இருந்தனர்.

- இந்தியாவின் வைசுராய் கர்சான் பிரபுவால் அக்டோபர் 16, 1905 இப்பிரி வினை நடைமுறைப்படுத்தப்பட்டது.

- புதிய அமைப்பில் மேற்கு வங்காளம் 141,580 சதுர மைல்கள் பரப்பளவை யும் 5.4 கோடி மக்கள்தொகையினையும் (4.2 கோடி இந்துக்கள், 1.2 கோடி முசுலிம் கள்) கொண்டிருந்தது. இரண்டாவது பிரிவு கிழக்கு வங் காளம் மற்றும் அசாம் 106,540 சதுர மைல்கள் பரப்பளவையும் 3.1 கோடி மக்கள்தொகை யினையும் (1.3 கோடி இந்துக்கள், 1.8 கோடி முசுலிம்கள்) கொண்டிருந்தது.

- எனவே இப்பிரிவினை மத அடிப்படையில் அமைவதுடன் இந்து முசு லிம்களிடையே வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்காக செய் யப்படுகிறது என்று இந்திய தேசியவாதிகள் குற்றம் சாட்டினர். மேற்குவங்க இந்துக்கள் இதனை எதிர்த்தாலும், கிழக்கு வங்க முசுலிம்களி டையே இப்பிரிவினை பரவலான வரவேற்பைப் பெற்றிருந்தது. அடுத்த சில ஆண்டுகளுக்கு இந் திய தேசியக் காங்கிரசின் தலைமையில் வங்காளம் முழுவதும் இதை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றன.

- 1911 இப்பிரிவினைத் திட்டம் திருப்பிப்பெறப்பட்டு இரு மாகாணங்களும் மீண்டும் ஒரே மாகாணமாக இணைக்கப்பட்டன. எனினும் இப்பிரிவினை

Edit with WPS Office

யால் வங்காளத்தில் மத அடிப்படையில் தேசிய உணர்வுகள் ஆழமாக வேரூன்றிவிட்டன. 1947ல் இந்தியா மத அடிப்படையில் பிரிக்கப்பட்ட போது கிழக்கு வங்காளம் பிரிந்து பாகிஸ் தானுடன் இணைந் துவிட்டது.

- 1971 வங்காளதேச விடுதலைப் போரின் மூலம் பாகிஸ்தானிலிருந்து விடுதலை பெற்று பங்களாதேஷ் என்ற தனி நாடாகியது.

- **சுதேசி இயக்கம்**

- **சுதேசி இயக்கம்** என்பது சொந்த நாட்டில் தயாராகும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் முன்னுரிமை அளித்து அந்நிய நாட்டுப் பொருட்களை புறக்கணிக்கும் இயக்கம் ஆகும். இது இந்திய விடுதலை இயக்கத்தின் போது விடுதலைப் போராட்ட வீரர்களால் பிரிட்டானிய அரசை எதிர்க்கப் பயன்படுத்தப்பட்ட போராட்ட உத்திகளில் ஒன்றாக விளங்கியது.

- இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது இந்தியாவின் மிகப்பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான இந்திய தேசிய காங்கிரஸ் இந்த இயக்கத்தைத் தொடங்கியது. ஆங்கில ஆட்சியின்பால் கொண்ட அதிருப்தி யின் காரணமாக, காங்கிரசை சேர்ந்த பலரும் வெறும் விண்ணப்பங்களை யும் வேண்டுகோள்களையும் அரசுக்குச் சமர்ப்பிப்பதால் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படப் போவதில்லையென்றும், இதர பல நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் போராடுதல் அவசியம் என்றும் கருதிக்கொண்டிருந்தனர். அவ் வெண்ணப் போக்கின் பிரதிபலிப்பாக 1906-ஆம் ஆண்டு கல்கத்தா வில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ்யம், சுதேசி, தேசியக்கல்வி, அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு என்பன போன்ற தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன. இதுவே சுதேசி இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

- மகாத்மா காந்தி காங்கிஸ் கட்சியின் தலைவரான பின், இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் புதியதோர் திருப்பு முனை ஏற்பட்டது. காந்தியடிகள் அந்நி யராட்சியை எதிர்க்கப் பொது மக்களை ஒன்று திரட்டி, அவர்கள் ஆதர வோடு பல போராட்டங்களை நடத்தினார். தனி நபர் சத்தியாக்கிரகம் , உப்புச் சத்தியாக்கிரகம், உண்ணா நிலை அறப்போர் என்று அவர் நடத்திய போராட்டங்களில் ஒன்று சுதேசி இயக்கம்.

## தாதாபாய் நௌரோஜி

- **தாதாபாய் நௌரோஜி** (செப்டம்பர் 4, 1825 – ஜூன் 30, 1917) இந்தியாவின் அரசியல் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். 1886, 1893, 1906 ஆகிய கால கட்டங்களில் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகச் செயல் பட்டார். 1892 முதல் 1895 வரை ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

- இந்தியாவின் பெருங்கிழவர்” (கிழவன் என்றால் தலைவன் எனவும்

Edit with WPS Office

பொருளுண்டு) The Grand Oldman of India என்று அழைக்கப்பட்ட தாதாபாய்

- நௌரோஜிக்கு உலக அரசியல் வரலாற்றில் ஒரு சிறப்பிடம் உண்டு. இங்கிலாந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட, அதாவது இந்தியாவில் இருந்து மட்டுமல்லாமல், ஆசிய நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறப்பினர் இவர்தான்.

**தாதாபாய் நௌரோஜி**, 1825-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் நாள் பம்பாயில் பிறந்தவர். அவரது தந்தை நௌரோஜி பலஞ்சி டோர்ஜி. ஜொராஸ்ட்ரியன் மதத்தைச் சார்ந்த பார்ஸி இனத்தவர். அவரது தாயார் மேனக் பாய். 1845-ம் வருடம், சர் எர்க்சைன் பெர்ரி எனும் பம்பாய் தலைமை நீதிபதி, சர் ஜாம்ஷெட்ஜி ஜீஜீபாயி இருவரும் சேர்ந்து நௌரோஜியை சட்டம் படிக்க இங்கிலாந்துக்கு அனுப்பினர்.

சட்டப் படிப்பு முடித்து, 1950-ல் பம்பாய் திரும்பியவுடன், மும்பை எல்பின்ஸ்டன் கல்லூரியில் கணிதம் மற்றும் இயற்கை தத்துவத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியில் அமர்ந்தார். 1851-ல், சமாசார் தர்பன் (Samachar Durpan) என்ற குஜராத்திப் பத்திரிகையில் எழுதத் தொடங்கிய அவர், பின்னர் ராஸ்ட் கோஃப்தர் (Rast Goftar) என்ற நாளிதழைத் தொடங்கினார். தொடர்ந்து, தியான் பிரசாரக் (Dyan Prasrak) என்ற பத்திரிகையிலும் எழுதினார். ஜொராஸ்ட்ரியன் மதத்தைப் புனிதப்படுத்த ஒரு சபையை ஏற்படுத்தினார். 1854-ல் Truth Teller என்ற மாதமிருமுறை இதழையும் ஆரம்பித்தார். பம்பாயில் ஞானப்பிரசார சபை, அறிவியல் மற்றும் இலக்கிய சங்கம், பார்ஸி உடற்பயிற்சிப் பள்ளி, விதவையர் சங்கம் போன்றவற்றை ஏற்படுத்தினார்.

1866-ல் லண்டனில், கிழக்கு இந்தியச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அதில், இந்தியாவைச் சேர்ந்த உயர் உத்தியோகஸ்தர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அவர், ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இந்தியர்கள் படும் துயரத்தை லண்டனில் வெளிப்படுத்தினார்.

1872-ம் ஆண்டு, இந்தியாவில் உள்ளாட்சி நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்ய பல முயற்சிகள் செய்தார். 1873-ல் பரோடா அரசரின் திவானாகப் பொறுப்பேற்றார். பின்னர் அந்தப் பதவியில் இருந்து விலகி மீண்டும் லண்டன் சென்றார். பின்னர் 1875 மற்றும் 1883-ல் பம்பாய் மாநகராட்சி உறுப்பினராகப் பணியாற்றினார்.

Edit with WPS Office

1875-ம் ஆண்டு, பம்பாய் மாநகராட்சி உறுப்பினராகவும், 1864-ல் பம்பாய் பல்கலைக் கழகத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1883-ம் ஆண்டு மாநகராட்சி உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1883-ம் ஆண்டு “Voice of Bombay” என்ற பத்திரிகையை தொடக்கினார். 1885-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், ரீ பிரபு (Lord Reay) என்பவரால், பம்பாய் சட்டமன்றத்தில் கூடுதல் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1885, டிசம்பர் 27 முதல் 29 வரை நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.

சில மாதங்களுக்கு பின், ஆங்கிலேய நண்பர்களின் உதவியுடன் இங்கிலாந்து சென்றவர், அங்கு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முயற்சித்தார். ஹால்பர்ன் லிபரல் சங்கத்தின் உதவியுடன், 1886-ம் ஆண்டு ஹால்பர்ன் மண்டலத்தைச் சேர்ந்த ஃபின்ஸ்பரி (Finsbury) தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட ஒப்புக்கொண்டார். ஆனால், தேர்தலில் 1950 வாக்குகள் மட்டுமே பெற்று டங்கன் (Col. Duncan) என்பவரிடம் தோற்றுப்போனார்.

### இந்திய தேசிய காங்கிரஸ்

1885-ம் ஆண்டு A.O. ஹியூம், W.C. பானர்ஜி ஆகியோருடன் சேர்ந்து அவர் இந்திய தேசிய காங்கிரஸை உருவாக்கினார். 1886, 1893, 1906 ஆகிய மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட கூட்டங்களில், இந்திய தேசிய காங்கிரஸுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தாதாபாய் நௌரோஜியை பெருந்தலைவராகப் போற்றியதுடன், தங்களது வழிகாட்டியாகவும் கருதினர். காரணம், தாதாபாய் நௌரோஜியின் பொருளாதாரக் கருத்துகள் இன்றளவும் எண்ணிப் போற்றுகின்ற அளவுக்கு மிகவும் ஆழமான, அறிவு செறிந்த அணுகுமுறைகளைக் கொண்ட கருத்துகளாகும்.
தாதாபாய் நௌரோஜி எழுதிய "பிரிட்டிஷ் கொடுங்கோல் ஆட்சியும் இந்தியாவின் வறுமையும்" (Poverty and Un British Rule in India) என்ற நூலில், இந்தியாவின் வள ஆதாரங்களையும், வரி விதிப்பு, கடன் போன்ற முக்கிய நிதியியல் ஆதாரங்களையும், வெள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றதை புள்ளியியல் ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினார்.

The manners and customs of the Parsees (Bombay, 1864), The European and Asiatic races (London, 1866), Admission of educated natives into the Indian Civil Service (London, 1868), the wants and

Edit with WPS Office

means of India (London, 1870), Condition of India (Madras, 1881), Poverty of India, Dadabhai Naoroji (1901). Poverty and Un-British Rule in India போன்ற நூல்களையும், "The Benefits of British Rule", in a modernised text by J. S. Arkenberg, ed., on line at Paul Halsall, ed., Internet Modern History Sourcebook. Lord Salisbury's Blackman (Lucknow, 1889), Naoroji, Dadabhai (1861). The Parsee Religion. University of London போன்ற கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

**பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்**

பிரிட்டன் பாராளுமன்றத்துக்கு, 1892-ம் ஆண்டு ஜூலை 6-ல் நடைபெற்ற தேர்தலில், கேப்டன் பென்டனை 3 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இதை எதிர்த்து உயர் நீதிமன்ற இங்கிலாந்து ராணியின் அமர்வு முன்பு கேப்டன் பென்டன் மேல்முறையீடு செய்தார். பல்வேறு ஆய்வுக்குப் பின் 2 வாக்கு வித்தியாசத்தில் நௌரோஜி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இவ்வாறு, பிரிட்டன் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆசியர் இவரே. 1895 வரை உறுப்பினராக இருந்தார். கிறிஸ்தவராக இல்லாததால், பைபிள் மீது சத்தியப் பிரமாணம் செய்யவில்லை. ஜொராஸ்ட்ரியன் மதத்தினரின் வேதமான 'அவெஸ்டா' என்ற நூலின் மீது சத்தியப் பிரமாணம் செய்ய அனுமதிக்கப்பட்டார். அவர் பலமுறை, பிரிட்டன் பாராளுமன்றத்தில் இந்தியர்களின் துயரத்தை வெளிப்படுத்தினார்.

இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினராக நௌரோஜி தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இந்தியாவைப் பொறுத்தவரை, முதல் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் இவரே ஆவார்.

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக்** (Indian Union Muslim League) இந்தியாவின் முஸ் லிம் தேசியவாத அரசியல் கட்சி. இக்கட்சி வடக்கு மற்றும் தெற்கு கேரளா வின் பகுதிகளில் செல்வாக்கு பெற்றுள்ள கட்சியாகும். இந்தியாவில் முஸ் லிம் மக்களுக்காக 1906-ல் நவாப் சலீம் முல்லாகான் "அகில இந்திய யூனி யன் முஸ் லிம் லீக்'கை ஆரம்பித்தார். அவருக்கு பின்னர் முகமது அலி ஜின்னா , அதனை நடத்தி வந்தார். பாகிஸ்தான் பிரிவினைக்குப்பின், இதன் தலைவரானார் காயிதே மில்லத்.

இந்திய-பாகிஸ்தான் பிரிவினையின் போது அதிக எண்ணிக்கையில் முஸ்லிம் கள்

Edit with WPS Office

பாகிஸ்தானுக்குப் போகாமல் இந்தியாவில் தங்கிவிட்டதால், அவர்களுக் காக கட்சி பெயரில் இருந்த "அகில' என்பதை நீக்கிவிட்டு 1949-ல் "இந்திய யூனியன் முஸ் லிம் லீக்" என்று மாற்றினார் காயிதே மில்லத். இதன் முதல் மாநாடு சென்னை யில் உள்ள ராஜாஜி ஹாலில் நடந்தது. பெரும்பாலும் இசுலாமியர்கள் பங்கு வகிக்கும் இந்திய அரசியல் கட்சியா கும். தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் அதிக முனைப்புடன் செயல்படுகிறது.

## அன்னி பெசண்ட்



அக்டோபர் 1, 1847 – செப்டம்பர் 20, 1933) என்பவர் பெண் விடுதலைக்காகப் போரா டியவர், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் ஆவார். ஒரு சாதா ரண ஐரியக் குடும்பத்தில் லண்டனில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தவர் அன்னி வூட். தந்தை வில்லியம் பைஜ்வூட் அயர்லாந்தில் பிறந்து லண்டனில் குடி யேறியவர். அன்னி ஐந்து வய தாக இருக்கும் போது தந்தையை இழந்தார். அன்னை ஹரோ நகரில் ஆண்கள் பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். அன்னி தனது 19வது வயதில் 1867 ஆம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயது மத குருவை மணந்தார். டிக்பி, மேபேல் என்ற இரண்டு பெண் குழந் தைகளைப் பெற்றெடுத்தார். கணவருடன் இணைந்து வாழ்வது அன்னிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பெண்ணுக்கு ஏற்பட்ட நோயினால் மன முடைந்து போன அன்னி நாத்திகரானார். கணவர் பெசண்ட், மனைவியை கோயிலுக்குச் செல்லும் படியும், கிறிஸ்தவ மதக் கொள்கைக்கு ஏற்ப நடக்கும் படியும் வற்புறுத்தினார். சுதந்திர மனப்போக்குக் கொண்ட அன்னி கணவரிடம் இருந்து 1873 இல் பிரிந்து வாழ முடிவெடுத்தார்.

கணவரிடம் இருந்து பிரிந்த பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதத் தொடங்கி னார் அன்னி. சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் எழுதினார். அன்னியின் அரசியல் போக்குகணவரிடம் இருந்து அவரை மேலும் பிரித்தது. பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். இறுதியாக கணவன்,

Edit with WPS Office

குழந்தைகளை விட்டுப் பிரிந்து லண்டனுக்குத் திரும்பினார். அதிகாரபூர்வமா கப் பிரிவினை கிடைக்கவில்லை. இரண்டு குழந்தைகளும் பிராங்கின் பொறுப் பிலேயே இருந்தனர். லண்டன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப் படிப்பைத் தொடர்ந்தார். மூடப் பழக்கவழக்கங்களுக்கெதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.

இந்தியா வந்த அன்னி பெசண்ட், சென்னையில் அடையாறில் பிரும்மஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்துபல நூல்களை எழுதினார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படி பெற்றார். இந்திய உடை தரித்து இந்துவாகவே வாழலானார்.

## காங்கிரஸ் தலைமைப் பதவி

1907 ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து , லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங் கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னி பெசண்ட் தனது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற் கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார்.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங் கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜூன் 15 ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அறிவித்தது. இதனால் நிலை குலைந்த ஆங்கில அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது.

டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிர சின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். லாகூரில் ஜவகர்லால் நேரு வின் தலை மையில் 1929 கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சி கோரி அறிக்கை வெளியானது. காங்கிரஸ் சோசலிச சார்பாக கருத் துக்களை வெளியிட் டமை அன்னி பெசண்டின் கொள்கைகளுக்கு உரியதாக இருக்க வில்லை. இத னால் அவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக் கங்களில் சேரவில்லை. காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன் போலவே ஈடுபாடுகாட்டி வந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றினார். 1929 இல் "பொதுநலவாய இந் தியா" என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன் றத்துக்கு அனுப்பினார்.

தனது எண்பத்தியோராவது அகவையில் தீவிர அரசியலில் இருந்து விலகிய அன்னி பெசண்ட் இறுதிக் காலங்களில் இந்திய மெய்யியலாளரான ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார். பிரும்மஞான சபையின் முன்னேற்றத்தில் முனைப்பாக ஈடுபட்டார். எண்பத்தேழாம் அகவையில் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 இல் சென்னையில் உள்ள அடையாறில் அன்னி பெசண்ட் காலமானார். அவரது மறைவிற்குப் பின்னர், அவரது நண்பர்கள் ஜே.

Edit with WPS Office

கிருஷ்ணமூர்த்தி, ஆல்டஸ் ஹக்ஸ்லி, ரோசலின் ராஜகோபால் ஆகியோர் இணைந்து கலிபோர்னியாவில் ஹப்பி வலி பாடசாலை"யை அமைத்தார்கள். இப்பாடசாலை தற்போது அன்னி பெசண்டின் நினைவாக பெசண்ட் ஹில் பாட சாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னி பெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண் டிருக்கிறது.

## பிரமஞான சங்கம்

*The Secret Doctrine* என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரி சில் 1889 ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திக வாதத் தைக் கைவிட்டு ஆத்திகரானார். பிளேவட்ஸ் கியின் பிரும்ம ஞான சங்கத்தில் உறுப்பினரானார். இதனை அடுத்து மார்க்சியவாதிகளு டன் தனக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். 1891 இல் பிளேவட்ஸ்கி இறந்ததை அடுத்து பிரும்ம ஞானத்தில் ஒரு முக்கிய புள்ளியானார். அன்னி பெசண்ட். அச்சபையின் சார் பில் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சி யில் கலந்து கொண்டார்.

1893 ஆம் ஆண்டில் பிரும்மஞான சபையின் உறுப்பினராக முதற் தடவையாக இந்தியா வந்தார். சபையின் அமெரிக்கக் கிளையின் தலைவரான வில்லியம் ஜட்ஜ் என்பவருடன் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து அமெரிக்கக் கிளை தனியாகப் பிரிந்தது. மீதமிருந்த சபை ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்ப வராலும் அன்னி பெசண்டினாலும் தலைமை வகிக்கப்பட்டது.

## ரௌலட் சட்டம்

பிரித்தானிய இந்தியாவில் இயற்றப்பட்ட ஒரு குற்றவியல் சட்டமாகும். மார்ச் 1919ல் இச்சட்டம் இயற்றப்பட்டது. விடுதலை / சுயாட்சி வேண்டும் இந்தியர்களை அடக்கவும், காலனிய அரசுக்கு எதிரான சதிகளை நசுக்கவும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

முதலாம் உலகப் போரின் முடிவில் பிரித்தானிய இந்தியாவில் (குறிப்பாக , பஞ் சாப்பிலும் வங்காளத்திலும்) புரட்சி இயக்கங்கள் அதிக எண்ணிக்கையில் தோன்றி வேகமாக வளர்ந்தன. இதனால் அதிர்ச்சி அடைந்த காலனிய அரசு **சர் சிட்னி ரௌலட்** என்பவரது தலைமையில் குழு ஒன்றை அமைத்து புரட்சி இயக்கங்களை ஒடுக்க வழிவகைகளை ஆராய்ந்தது. ரௌலட் குழுவின் பரிந்து ரையின் பேரில் ரௌலட் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் தீவிரவாதி என்று சந்தேகிக்கப்பட்ட எந்த பிரித்தானிய இந்தியக் குடிமகனை யும் ஈராண்டுகள் நீதிமன்ற வழக்கு விசாரணையின்றி சிறை வைக்க அரசுக்கு அதிகாரம் அளித்தது. ஊடகங்களைக் கட்டுப்படுத்தவும் காவல் துறையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்து விசாரணையின்றி சிறைகளில் அடைத்து வைக்கவும், நீதிமன்ற அனுமதியின்றிச் சிறையிலிடவும் இச்சட்டம் வழிவகுத்தது.

இச்சட்டம் கடுமையானது என்று மகாத்மா காந்தி உள்ளிட்ட இந்தியத் தலை வர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிரான போராட்டங்கள் ரௌலட் சத்தியாகிர கம் என்று அழைக்கப்பட்டன. நாடெங்கும் இச்சட்டத்தைக் கண்டித்து ஊர்வலங் கள், கூட்டங்கள், பேரணிகள் நடைபெற்றன. அம்ரித்சர் (அமிர்தசரஸ்) நகரில் இச்சட்டத்துக்கு எதிராக நடந்த கூட்டமொன்றில் பிரித்தானியப் படைவீரர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதால் ஜாலியன்வாலாபாக் படுகொலை நடைபெற்றது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இச்சட்டம் கொடுமையானது என்பதை ஏற்ற காலனிய அரசு மார்ச் 1922ல் இதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

Edit with WPS Office

## ஜாலியன்வாலாபாக்படுகொலை



919 ஏப்ரல் 13 அன்று பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் ஜாலியன்வாலாபாக் எனு மிடத்தில் இந்தச் சட்டத்துக்கு எதிராகப் போராடும் விதமாகக் கூடியிருந்த பொதுமக்களை ஜெனரல் டயர் என்ற ராணுவ அதிகாரி துப்பாக்கியால் சுட் டார், இதில் தோராயமாக 380 பேர் மரணமடைந்தனர், சுமார் 1200 பேர் படுகாய மடைந்தனர்.

இந்தப் படுகொலையைக் கண்டித்து நாடு முழுவதிலும் இருந்து வந்த கண்ட னங்களைத் தொடர்ந்து ஆங்கில அரசு "ஹண்டர் கமிஷன்" என்ற குழுவை அமைத்து விசாரணை நடத்தியது. விசாரணையின் முடிவில் டயரை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது. அதே சமயத்தில் இதற்கு முரணாக டயர்க்கு "பஞ்சாப்பின் பாதுகாவலன்" என்று பொறிக்கப்பட்ட வாளும், ஆங்கில ஆதர வாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியும் வழங்கப்பட்டது.

## REFERENCES

1.A.R.DESAI- SOCIAL BACKGROUND OF INDIAN NATIONALISM.

Edit with WPS Office